OS.No. 63/2022

Date : 16.10.2025

Witness Name & Rank – மயில்சாமி - PW2

சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்

1. நடராஜ் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது மனைவியின் அத்தை மகளை திருமணம் செய்து உள்ளார். வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1.26 ஏக்கர் ஆகும். அதன் ஆவணங்களை நான் படித்துப் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் நல்லா கவுண்டர் மற்றும் வள்ளியம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். முதல் வாதி நடராஜுக்கு அவர்கள் என்ன வேண்டும் என்றால் தாத்தா முறையாகும். மேற்படி நல்லா கவுண்டரின் மகன்கள் பாகம் செய்து கொண்டார்களா என்றால் பாகம் செய்து கொண்டார்கள் எப்போது பாகம் செய்து கொண்டார்கள் என்றால் 1967 இல் பாகம் செய்து கொண்டார்கள். மேற்படிப் பாகசாசன பத்திரத்தை நான் பார்த்துள்ளேன் என்றால் பார்த்துள்ளேன் அந்த பாகசாசன பத்திரத்தில் முதல்வாதி நடராஜன் தந்தை பொன்னுச்சாமிக்கு என்ன பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு குறிப்பிட்டு தெரியாது. எவ்வளவு ஏக்கர் நிலம் பொன்னுசாமிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது.
2. அது தவிர பொன்னுச்சாமி வாங்கிய சொத்துக்கள் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பொன்னுச்சாமிக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். மேற்படி வாதிகள் நடராஜ் மற்றும் அன்னபூரணி ஆகிய இருவரும் பொன்னுச்சாமியின் முதல் மனைவியான முத்துலட்சுமியின் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி பொன்னுச்சாமி முதல் மனைவி மறைந்த பிறகு தான் இரண்டாவது மனைவியாக இரண்டாம் பிரதிவாதி லட்சுமியை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். மேற்படி லட்சுமிக்கு ஜெயபிரகாஷ் என்று ஒரு மகன் இருந்து திருமணம் செய்யாமலே காலமாகிவிட்டார் என்றால் சரிதான். மேற்படி ஜெயபிரகாஷ் இறக்கும் தருவாயில் அவருக்கு வயது என்ன இருக்கும் என்றால் சுமார் 25 வயது இருக்கும்.
3. மேற்படி பொன்னுச்சாமி எப்போது காலமானார் என்றால் 2003 இல் காலமானார். மேற்படி பொன்னுச்சாமி மறைந்த பிறகு பொன்னுச்சாமியின் இடம் ஏதேனும்

தரப்பினர்களால் விற்கப்பட்டதா என்றால் பொன்னுச்சாமி மறைந்த பிறகு வாதிகள் நடராஜ், அன்னபூரணி மற்றும் பிரதிவாதி லட்சுமி காலமான ஜெயப்பிரகாஷ் ஆகியோர் சேர்ந்து திருமலை சாமி என்பவருக்கு சில நிலங்களை விற்பனை செய்தார்கள். மேற்படி விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்ததாக சொல்லி உள்ள நிலையில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களுக்கு மட்டும் விடுதலை பத்திரம் 2016 ல் எழுதப்பட்டது.மேற்படி விடுதலை பத்திரத்தில் யார் யார் கையொப்பம் செய்திருந்தார்கள் என்றால் லட்சுமி, ஜெய்பிரகாஷ், அன்னபூரணி மற்றும் நடராஜ் ஆகியோர் கையொப்பம் செய்து இருந்தார்கள். எனக்கு சரியான சட்டம் பாகப்பிரிவினை தொடர்பான புரிதல் இல்லாமல் நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேன் அதை ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல என்றால் சரியல்ல.

4. பொன்னுச்சாமி மறைந்த பிறகு அவரது வாரிசு சான்றிதழை ஒன்றாம் வாதி நடராஜ் வாங்கியுள்ளார் என்றால் இரண்டாம் பிரதிவாதி லட்சுமி வாங்கியுள்ளார். எந்த ஆண்டு மேற்படி வாரிசு சான்று வாங்கப்பட்டது என்றால் 2008 ல் வாங்கப்பட்டது. அதன்படி யார் யார் வாரிசுகளாக பொன்னுச்சாமிக்கு சொல்லப்பட்டுள்ளது என்றால் நடராஜ், லட்சுமி, ஜெயபிரகாஷ் ஆகியோர் பெயர் சொல்லப்பட்டுள்ளனர்ஏ என்றால் அன்னப்பூரணி பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வாரிசு சான்றிதழ் சொத்து தொடர்பான ஆவணங்களை எனக்கு யார் படிக்க காண்பித்தது என்றால் முதல் வாதி நடராஜ் காண்பித்தார். மேற்படி 2008 இல் வாரிசு சான்றிதழில் அன்னபூரணி பெயர் இல்லாததை தொடர்பாக முதல் வாதி நடராஜ் ஏதேனும் ஆட்சேபனை அப்போது தெரிவித்து என்னிடம் சொன்னாரா என்றால் அவ்வாறு எதுவும் என்னிடம் சொல்லவில்லை.

5. முதல்வாதி தான் இரண்டாவது வாதிக்கு சொத்து தரக் கூடாது என அவரது பெயரை விட்டு வாரிசு சான்றிதழ் வாங்கி உள்ளார் என்றால் சரியல்ல. அதன் பிறகு ஜெயபிரகாஷ் மறைந்த பிறகு லட்சுமிக்கு எதிராக தீய எண்ணம் கொண்டு சொத்தை அபகரிக்க வேண்டி அன்னபூரணியை தன்னுடன் கூட்டு சேர்த்து இந்த தவறான வழக்கு தாக்கல் செய்துள்ளார் எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதி பாலசுப்பிரமணியம் லட்சுமியிடம் இருந்து சொத்தை விலைக்கு வாங்கி உள்ளார் என்றால் சரிதான். மேற்படி

முதல் பிரதிவாதி சொத்தை வாங்கிய பிறகு அவர் அனுபவித்து வருகிறார் என்றால் அனைவரும் கூட்டாக தான் அனுபவித்து வருகிறார்கள். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் எங்கு தயார் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் எழுதியுள்ளது எனக்கு தெரியுமா என்றால் நான் படித்து பார்த்து கையப்பம் செய்தேன். நான் நடராஜன் நெருங்கிய உறவினர் என்பதால் அவர் சொல்லிக் கொடுத்து அவர் ஆதரவாக தவறான சங்கதிகளை முன்னிறுத்தி சாட்சியம் அளிக்கிறேன் எனவே எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)K.Yuvaraj,B.A.B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.